**சுருக்கம்**

நீர்பாசன வசதி – வங்கிக் கடன் மற்றும் மான்யம் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி ஏற்படுத்துதல் – மானியம் மற்றும் வங்கிக் கடன் வழங்கும் திட்டம் – செயற்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுக்கிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந1)த் துறை.**

**அரசு ஆணை (நிலை) எண். 111.** **நாள். 31.12.2007.**

**திருவள்ளுவர் ஆண்டு, 2038**
**சர்வஜித், மார்கழி 15.**

**படிக்கப்பட்டது :**

1. மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், கடிதம் எண்.பி3/231/2007, நாள்.18.1.07 மற்றும் 25.6.07.

* * * *

**ஆணை:**

2007–2008 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், ‘‘பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதிகள் அமைப்பதற்காக, அதிகபட்சம் ரூபாய் ஒரு லட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் வரும் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும் எனறும், அதற்காக வங்கிக்கடன் மற்றும் அதற்கு இணையான அதிகபட்சம் தலா ரூபாய். 50,000/– அளவிலான 50 விழுக்காடு மானியம் அரசு வழங்கும் என்றும், இத்திட்டம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்திற்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது’’ என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. இத்திட்டத்தை திறம்பட செயற்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகள், வங்கியின் கூட்டமைப்பு மற்றும் அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தும் பொருட்டும், விவசாயிகள் பாசன வசதியை உருவாக்கி, விவசாயத்தை மேம்படுத்தி, பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திட வாய்ப்பளிக்கும் வகையிலும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

3. இத்திட்டம் குறித்து அரசு நன்கு ஆய்வு செய்து, 2007–2008 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தப்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி ஏற்படுத்துவதற்காக வங்கிக் கடன் மற்றும் அதற்கு இணையான அதிகபட்சம் தலா ரூ.50,000 அளவிலான 50 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் திட்டம் ரூ.25 கோடி செலவினத்தில் செயற்படுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே செயற்படுத்த அரசு ஆணையிடுகிறது.

4. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 500 பயனாளிகளுக்கு 2007–08 ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடாக 500 மின் இணைப்பு தமிழ் நாடு மின்சார வாரியம் மூலம் வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

5. இத்திட்டம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சிறு மற்றும் குறு விவசாயிகள் மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் வரை வங்கி கடன் அளிக்கும். அதில் 50 விழுக்காடு வரை அரசு மானியமாக வழங்கப்படும். இந்த மானியம் அதிகபட்சம் ரூ.50,000/– வரை வழங்கப்படும். கடன் வழங்கப்பட்டு (disbursed) மற்றும் சொத்து உருவாக்கப்பட்ட தகவல் கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மானியத் தொகை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வங்கிகளுக்கு வழங்கப்படும். இந்த மானியத்தொகை பயனாளியின் கடன் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்படும். மானியத் தொகை வழங்கும் பொருட்டு செலவினமாக **ரூ.25,00,00,000/–**க்கு ஒப்பளிப்பு வழங்கி அரசாணையிடுகின்றது.

6. இத்திட்டத்தை நிறைவேற்ற கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றவேண்டும்.

(i) மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரை தலைவராகவும் கீழ்க்கண்ட நபர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் | உறுப்பினர் / அமைப்பாளர் |
| 2. | உதவி பொது மேலாளர் (NABARD) | உறுப்பினர் |
| 3. | இணை இயக்குநர், வேளாண்மை துறை | உறுப்பினர் |
| 4. | செயற்பொறியாளர் (நிலநீர் பிரிவு) (பொ.ப.து) / செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) | உறுப்பினர் |
| 5. | கண்காணிப்பு பொறியாளர், மின்வாரியம் | உறுப்பினர் |
| 6. | தொடர்புடைய வங்கியின் பிரதிநிதிகள் | உறுப்பினர் |

(ii). பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் பொருட்டு நிலத்தின் நீர் ஆதாரத்தன்மைக்கு பொதுப்பணித்துறையின் நிலத்தடி நீர் பிரிவு அல்லது பிற அரசு சார்ந்த நிறுவனங்களின் தொழில்நுட்ப சான்றிதழை பெற்று விண்ணப்பதாரர் அளிக்க வேண்டும்.

(iii). நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்பட்ட இனங்களில் 500 பயனாளிகளுக்கு மட்டும் 2007–08 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் மின் வாரியத்தால் மின் இணைப்பு வழங்கப்படும்.

(iv) மாவட்டக்குழு பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க, விண்ணப்பதாரரின் குறுகிய நிலவுடைமை, மின் இணைப்பு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான சக்தி ஆகிய கூறுகளை ஆய்வு செய்யும்.

(v) ரூ.50,000/– வரையிலான கடன் தொகைக்கு பம்பு செட்களையும், நிலத்தில் உள்ள விளைபொருட்களையும் அடமானம் பெற்று வங்கிக்கடன் வழங்கப்படும். ரூ.50,000/–க்கு அதிகப்படியான கடன் தொகைக்கு வங்கியின் விதிகளின்படி பிணையம் பெற்று கடன் வழங்கப்படும்.

(vi) இது அரசால் செயல்படுத்தப்படுகின்ற திட்டமாகையினால் வங்கிகள் சலுகை அடிப்படையிலான வட்டி நிர்ணயம் செய்யும்.

(vii) கடன்பெறுவதற்கான விண்ணப்பங்கள் மாவட்ட குழுவின் முன்னர் வைக்கப்படும். மாவட்ட குழு விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியானவர்களுக்கு கடன் வழங்கிட வங்கிகளுக்கு பரிந்துரை செய்யும். இக்குழு மாதம் ஒரு முறையேனும் கூடும். மாவட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் மேல் வங்கி நடவடிக்கை மேற்கொண்டு 30 நாட்களுக்குள் கடன் தொகையை வழங்க வேண்டும்.

(Viii) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் மூலமாக திட்டத்தின் செயல்பாட்டினை கண்காணித்து மாவட்ட ஆட்சியர் காலமுறை அறிக்கையை அரசுக்கு அனுப்பவேண்டும்.

(ix) பம்பு செட்கள் அமைக்கப்பட்ட இனங்களில் 20 விழுக்காடு அளவிற்காவது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் நேரடியாக பார்வையிட்டு மாவட்ட குழுவிற்கு அறிக்கை அனுப்பவேண்டும். இத்திட்டத்தின் செயல்பாடு குறித்த மாதாந்திர அறிக்கை மாவட்ட ஆட்சியரால் அரசுக்கு (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.

(x). தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மானியத் தொகையின் பயன்பாட்டு முன்னேற்றம் குறித்தும், திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கை அரசுக்கு அனுப்பவேண்டும்.

(xi) கடனை திருப்பிச் செலுத்த ஓராண்டிற்கு விளக்களிக்கப்பட்டு ஏழு வருடாந்திரத் தவணைகளில் கடனை திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

7. இத்திட்டத்தினை செயல்படுத்த, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழக தலைமை அலுவலகத்திலுள்ள பணியாளர்களுடன் கூடுதலாக 2 உதவியாளர்கள் மற்றும் ஒரு கணினி தகவல் பதிவாளர் (Data Entry Operator) ஆகிய

3 பணியாளர்களை ஒப்பந்த முறையில் பணியில் அமர்த்திக் கொள்ள அனுமதியளிக்கப்படுகின்றது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு கணினி மற்றும் மென்பொருட்களை வாங்குவதற்காக ரூ.6.50 இலட்சம் செலவினம் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

8. மேலே பத்தி 5 மற்றும் 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்படவேண்டும் :-

2225 – ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டவர் நலன்

03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்.

190 – பொதுத் துறை நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் நிதி உதவி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்.

II – மாநிலத் திட்டம்
JA -பாசன வசதிக்காக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு விவசாயிகளுக்கு பாசன வசதி கடன் மானியம் வழங்க தமிழ் நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதியுதவி

09 உதவி மானியங்கள்
02 – மூலதன செலவுக்கான மானியங்கள் ரூ.6,50,000/–
(DPC 2225 **03 190** JA)
03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் ரூ.25,00,00,000/–
(DPC 2225 **03 190** JA 0931)

9. மேலே பத்தி 5 மற்றும் 7ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை பெற்று தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்க பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இத்தொகை பணமாக வழங்கப்படாமல் தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்காணும் தன்பெயர் வைப்புக் கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவேலை மூலம் பற்றுவைக்கப்படவேண்டும். (Credited to the following head of account by means of Cheque / Demand Draft drawn in favour of the P.D. Account of Tamil Nadu Backward Classes Economic Development Corporation)

K. வைப்பீடுகளும் முன்பணங்கள்
(b) வட்டி பெறாத வைப்பீடுகள்
8443 00 – உரிமையியல் வைப்புத் தொகைகள்
800 பிறவைப்புத் தொகைகள்
B.S. தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் வைப்புத் தொகைகள் (TABCEDCO)
(DPC 8443 **00 800** BS 000E) (Receipts)
(DPC 8443 **00 800** BS 0006) (Out go)

10. மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதியொதுக்கம் 2007–08 ஆம் ஆண்டில் திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். 2007–08 ஆம் ஆண்டின் திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. மேலும், இச்செலவினத்தை 2007–08 ஆம் ஆண்டின் திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்க்க தவறாமல் கருத்துரு அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.82735/பி,மி.பி./07, நாள்.27.12.07. ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1587,(ஆயிரத்து ஐநூற்று எண்பத்து ஏழு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ந.வாசுதேவன்,**<br>**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u> :

இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை –5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை –2.
இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை –5.
தலைவர், தமிழ் நாடு மின்சார வாரியம், சென்னை–2.
செயலாளர், நிதித் துறை /எரிசக்தித் துறை / பொதுப்பணித் துறை / வேளாண்மைத் துறை / வருவாய்த் துறை /பொதுத் துறை, சென்னை –9.
பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், சென்னை –10.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
மேலாளர், (NABARD), சென்னை –35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 /35 /6 / (பெயரில்)
நிதித்(BC,MBC) (L &W)/ B.G.II / துறை, சென்னை –9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.
அமைச்சர் (பிந) சென்னை –9.
அமைச்சர் (மின்சாரம்) சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் அனைத்து பிரிவுகள்
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**